# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 12.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 948/SCIC/2023**

திரு வெ.ந. மணிவாசகம் புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர், --- பொது அதிகார அமைப்பு
சார்பதிவாளர் அலுவலகம்,
மானாமதுரை.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 05.11.2020 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், மானாமதுரை என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். 08.12.2018 அன்று பதிவஞ்சல் மூலம் சார்பதிவாளர் மானாமதுரை அவர்களுக்கும் 30.09.2019 அன்று மாவட்டஆட்சியருக்கும் அனுப்பிய புகார் மனுக்கள் குறித்து 5 இனங்களில் தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 18.11.2020 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 14.03.2023 தேதியிட்டு

சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் CP 948/2023 ஆக பதிவு செய்துள்ளது. அதனைத்தொடர்ந்து மனுதாரர் 09.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த புகார் மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 12.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி மு. மகாலட்சுமி, உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், மானாமதுரை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் 05.06.2023, மற்றும் 18.10.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு இனவாரியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் 26.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

5. இவ்வழக்கில் மனுதாரரின் இதே பொருள் தொடர்பான சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மற்றொரு மனுவிற்கான புகார் மனு CP 942/2020 ஆனது ஆணையத்தால் 11.03.2024 அன்று ஏற்கனவே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது.

6. எனவே, மனுதாரரின் ஒரே சட்டப்பிரிவு 6(1)ன் கீழான இவ்வழக்கிற்கான மற்றொரு புகார் மனுவானது ஆணையத்தால் ஏற்கனவே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இப்புகார் மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்பதை ஆணையம் மனுதாரருக்கு எடுத்துரைக்கிறது. இத்துடன் **இப்புகார் மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்.தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 948/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
திருமங்கலம், மானாமதுரை.

**<u>மனுதாரர்:-</u>**
திரு வெ.ந.மணிவாசகம்,
த/பெ நடராஜன்,
44, வெள்ளாளர் தெரு,
மானாமதுரை 630 606
சிவகங்கை மாவட்டம்.

Copy to: File TK/PS